## 10

# இந்த உலகத்திலிருந்து வெளியே

## (2 கொரிந்தியர் 12:1–12)

*"... என் பலவீனங்களிலேயன்றி, வேறொன்றிலும் மேன்மைபாரட்ட மாட்டேன்" (12:5).*

*ஒரு பிரபலமான கண்ணோட்டத்தின்படி, "இந்த உலகத்திலிருந்து வெளியே" என்ற வகையில் நாம் விவரிக்கும் அனுபவத்தின் பண்பு, உண்மையான கிறிஸ்தவ வாழ்வின் அடையாளமாக உள்ளது. இவ்வகையான அனுபவம் அடிக்கடி அளவிடப்பட்டு, ஆராயப்பட்டு, மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த சீஷத்துவத்தின் அடையாளமாக அளிக்கப்படுகிறது. "இந்த உலகத்திலிருந்து வெளியே" என்பதில் தங்கள் வலியுறுத்தத்தை வைப்பவர்கள், சிலவேளைகளில் தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்துவதற்காக, தங்கள் அனுபவங்களை ஒருவர் மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். மதரீதியான பேச்சு என்ற [தொலைக்காட்சி] நிகழ்ச்சியின் மீதான விருந்தினர், ஒரு புதிய வேலையைக் கண்டறிதலை விளைவித்த ஜெபத்தைத் தேவனுடைய பிரசன்னத்திற்கு ஆதாரமாக அளிக்கலாம். சில வட்டாரங்களில், உணர்வுப் பூர்வமான மன எழுச்சியின் வலிவு, வல்லமையின் உணர்வுகள் மற்றும் மக்கள் உற்சாகத்தினால் "வசீகரிக்கப்படுதல்" ஆகியவை கிறிஸ்தவ வாழ்வின் பரீட்சையாக உள்ளன. ஆராதனையின் வேளை ஒவ்வொன்றிலும் நடைமுறைப் படுத்தப்படுகிற ஒரு பரீட்சை வருகிறது. அது "இந்த உலகத்திலிருந்து வெளியே" இருந்ததா?*

*நமது விசுவாசத்தின் உண்மைத் தன்மை பற்றிய, குறிப்பிட்ட இந்தப் பரீட்சையானது, புதிய ஏற்பாடு பற்றிய நமது கேள்விகளின் தொடர்ந்த பொருத்தத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது, ஏனெனில் கொரிந்தியர்களாலும் இதே வகையான கேள்விகள் எழுப்பப்பட்டன. 2 கொரிந்தியர் நிருபத்தைப் பவுல் எழுதியபோது, கிறிஸ்தவர் என்ற வகையில் (10:7) மற்றும் கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்ற வகையில் (11:23) அவரது உண்மைத் தன்மை கேள்விக்கு உட்பட்டிருந்தது. அவர் எவ்வளவாக மனதை ஈர்க்காதவராயிருந்தார் என்பதைக் கவனித்திருந்த சிலர் அவருடன் கிறிஸ்து உண்மையிலேயே பேசியிருந்தார் என்பதற்கு "நிரூபணம்" வேண்டும் என்று கேட்டனர் (13:3). மனதை ஈர்க்காத இப்படிப்பட்ட ஒரு பேச்சாளர், ஆவிக்குரிய மனிதராக இருத்தல் சாத்தியமாக இருக்க முடியாது என்று அவர்கள் யூகித்தனர். அவருக்கு ஆவியானவர் அருளப்பட்டிருந்தால், அவரது உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்த, "உண்மையான அப்போஸ்தலருக்குரிய அடையாளம்" ஏதாவது இருக்க வேண்டும் என்று நினைத்தனர் (cf. 12:11, 12).*

*"மகாப் பிரதான அப்போஸ்தலர்கள்" என்று அழைக்கப்பட்டவர்களால் (12:11), கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்ற வகையில் பவுலின் உண்மைத் தன்மை*

யானது கேள்வி கேட்கப்பட்டது என்பது உறுதி. அநேகமாக யாரேனும் ஒருவர், பவுலுக்குள் "உண்மையான அப்போஸ்தலருக்குரிய" அடையாளங்கள் இருந்தன என்பதை மறுத்திருக்கலாம், ஏனெனில் அவரது விரோதிகள் பவுலுடன் "தங்களை அளந்துகொண்டு," பவுலுடன் "தங்களை ஒப்பிட்டுக்கொள்வதை" நோக்கமாகக் கொண்டிருந்தனர் (cf. *10:12*). பவுல் தாம் "உண்மையான அப்போஸ்தலருக்குரிய அடையாளங்களையும்" நிகழ்த்தியிருந்ததாக வலியுறுத்திய விஷயமானது, அவர் தற்காப்பு வாதத்தில் இருக்கிறார் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. மற்ற வர்கள் தங்கள் சொந்த அற்புதங்களையும் "அடையாளங்களையும்" பற்றிப் பெருமைபாராட்டி, தங்கள் அனுபவங்களைப் பவுலின் அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் பல அனுபவங்கள் "இந்த உலகத்திற்கு வெளியே" இருந்தன. *5:13*ல் "பைத்தியங்கொண்டவர்கள்" (*exestemen*) என்ற பவுலின் சொற்றொடர், நேரடியான அர்த்தத்தில் "பரவசநிலை" என்பதாக உள்ளது. சிலருக்கு, பரவசநிலை மற்றும் உணர்வு எழுச்சியான அனுபவமே நம்பத் தன்மைக்குப் பரீட்சையாக இருந்தது. இந்த "அடையாளங்கள்," ஒருவர் தேவனுடைய ஆவியைக் கொண்டிருந்தார் என்று நிரூபித்தன.

## மூன்றாம் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் *(12:1-6)*

பரவசநிலை மற்றும் உணர்வு எழுச்சியான அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் மற்றவர்களின் ஆவிக்குரிய தன்மையைப் பற்றிப் பரீட்சித்தவர்கள், நம்முடைய இந்த வேளையிலும் தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளனர். நாம் கேட்கும்படி அவர்கள் நம்மை நிர்ப்பந்திக்கின்றனர். "இந்த உலகத்திலிருந்து வெளியே" என்ற அனுபவம் கிறிஸ்தவ வாழ்வில் கொண்டுள்ள பணிப்பொறுப்பு என்ன? இது நமது உண்மைத் தன்மைக்கான பரீட்சை என்று நாம் யூகிக்க வேண்டுமா? அல்லது உணர்வு எழுச்சியான எல்லா அனுபவங்களையும் நாம் சந்தேகப்பட்டு அது கிறிஸ்தவ வாழ்வில் இடம் ஒன்றும் கொண்டிருப்பதில்லை என்று முடிவு செய்ய வேண்டுமா? பவுலின் பதிலானது இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க நமக்கு உதவுகிறது.

*12:1-6*ன் பொருளடக்கம் பவுல் எழுதிய வேறு எதைப் போன்றும் இருப்ப தில்லை. அவர் வேறு எவ்விடத்திலும் ஒருக்காலும் குறிப்பிட்டிராத [தமது] அனுபவங்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார். வழக்கத்திற்கு மாறான இந்த விஷயத்திற்கான காரணம் தெளிவாக உள்ளது: இந்த அனுபவங்களைப் பற்றிக் கலந்துரையாடுமாறு பவுலை மற்றவர்கள் கட்டாயப்படுத்தியதால் மாத்திரமே பவுல் இவற்றைக் கலந்துரையாடுகிறார். இப்படிப்பட்ட அறிக்கைகள் பெருமைபாராட்டுதல் போன்று ஒலிக்கும் என்பதையும் அது "தகுதியல்லவே" என்பதையும் *(12:1)* பவுல் அறிந்திருக்கிறார். "நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள்" என்று அவர் கூறுகிறார் *(12:11)*. இப்படிப்பட்ட பெருமைபாராட்டுதல் மதியீனமானதாக உள்ளது *(11:16, 17, 21)*, ஆனால் இந்த சூழ்நிலையில் இது அவசியமானதாக உள்ளது *(12:1)*. இந்தப் பாடக்கருத்தை மற்றவர்கள் கட்டாயப்படுத்தியிராவிட்டால், பவுல் தமது வாழ்வின் அந்தரங்க மான இந்த விபரங்களைப் பற்றி ஒருக்காலும் அறிக்கை செய்திருக்கமாட்டார்.

அவர் தமது விமர்சகர்களுக்கு இணையாக பெருமைபாராட்டுதலுக்குப் பெருமைபாராட்ட வேண்டும் என்ற காரணத்தினால் மட்டுமே "கர்த்தர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும்" பற்றிய பாடக்கருத்தை எடுத்துரைத்தார்.

12:1-10 வசனப்பகுதியானது பவுலின் நிருபங்களிலேயே மிகவும் தனிவகைப்பட்டதாக இருப்பதால், பவுல் "இந்த உலகத்திற்கு வெளியே" இருக்கும் அனுபவங்களை விட்டுவிடவில்லை என்று கண்டுபிடிக்கும்போது நம்மில் பெரும்பான்மையானவர்கள் திகைப்படைகிறோம். "கர்த்தர் அருளிய தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்" இருந்தன (12:1). இந்தக் குறிப்பானது, தரிசனம் என்றும் (நடபடிகள் 26:19) வெளிப்படுத்துதல் என்றும் (கலாத்தியர் 1:12) விவரிக்கப்படுகிற அவரது மனமாற்றத்தின் காலத்தை இயல்பாகவே நமக்கு நினைவூட்டுகிறது. ஆனால் பவுலின் அசாதாரண அனுபவங்கள் அவரது மனமாற்றத்துடன் முடிந்துவிடவில்லை. "வெளிப்படுத்துதல்களின் விஞ்சிநிற்கும் மாபெரும்தன்மை" ஒன்றிருந்தது (12:7), அவற்றில் சில அப்போஸ்தலருடைய நடபடிகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன (9:12; 16:19; 18:9-11). இந்தப் பாடக்கருத்தானது, பவுல் "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்" என்று கூறுமிடமான 1 கொரிந்தியர் 14:18ஐ நமக்கு நினைவூட்டுகிறது. கிறிஸ்துவுக்காக [தேவனுக் காக] "பைத்தியங்கொண்டு இருத்தல்" (5:13) என்பது எதனை அர்த்தப்படுத்தியது என்பதைப் பவுல் அறிந்திருந்தார். அவரை விமர்சனம் செய்தவர்கள் பவுல் அறியாதிருந்த ஆழமான ஆவிக்குரிய அனுபவம் கொண்டிருந்ததில்லை.

இப்படிப்பட்ட கணங்கள் பவுலுக்கு முக்கியமானவையாக இருந்தன என்று கூறுவது மிகவும் சரியானதல்லாதவைகளாக இருப்பதில்லை. உண்மையில் அவர், மறக்கமுடியாததாக இருந்துள்ள ஒரு தரிசனத்தின் குறிப்பிட்ட ஒருநிகழ்வை நினைவுக்குக் கொண்டுவருகிறார். இந்த அசாதாரண வேளையானது, அவர் 2 கொரிந்தியர் நிருபத்தை எழுதுவதற்குப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றிருந்தது (ca. கி.பி. 42). நேரடியான அர்த்தத்தில் "இந்த உலகத்திலிருந்து வெளியே" இருந்த ஒரு அனுபவத்தைப் பற்றிப் பவுல் பேசுகிறார். அவர் "மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டார்" மற்றும் "பரதீசுக்குள் எடுக்கப்பட்டார்" (12:2, 3). இந்த அனுபவமானது, ஏனோக்கு (ஆதியாகமம் 5:24) மற்றும் எலியா (2 இராஜாக்கள் 2:11) ஆகியோரின் வரலாறுகளை நமக்கு நினைவுபடுத்துகிறது. "எடுக்கப்பட்டான்" என்பதற்கு உரிய (*harpzao* என்ற) கிரேக்க வார்த்தையானது, இந்த முழுஅனுபவமும் பவுலினால் தொடங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இப்படிப்பட்ட அசாதாரணமான அனுபவங்கள் அவருக்குச் சாதாரணமானதாக இருந்தது என்பது உறுதி. 2 கொரிந்தியர் நிருபத்தில், அவற்றின் "ஏராளத்தன்மை" பற்றி அவர் குறிப்பிடுகிறார். அது விசேஷித்த நுட்பங்களினாலோ அல்லது தயாரிப்பினாலோ அல்லது கருத்துத் தெரிவித்தலில் பவுலின் சொந்த வல்லமைகளினாலோ கொண்டுவரப்பட்டிருந்ததில்லை. இவ்வார்த்தையானது நேரடியான அர்த்தத்தில் "பிடிக்கப்படுதல்" அல்லது "எடுத்துச் செல்லப்படுதல்" என்று அர்த்தப்படுகிறது. "இந்த உலகத்திற்கு வெளியே" இருந்த இந்த அனுபவத்தைப் பவுலுக்கு அளிப்பதில் தேவன் செயல்பட்டிருந்தார் என்பதைப் பவுல் சந்தேகப்படவில்லை.

*பவுல், ‘‘மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டார்’’ (12:4) என்பதே பவுல் மிகவும் நினைவில் வைத்திருந்ததாக இருந்தது. பவுல் கேள்விப்பட்டது, விளக்கி உரைக்க மனிதத் திறனுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. பவுலின் வார்த்தைகள், “தூதர் பாஷைகளையும்” (1 கொரிந்தியர் 13:1) மற்றும் 1 கொரிந்தியர் 12-14ல் உள்ள ஆவிக்குரிய வரங்களையும் பற்றிய அவரது முந்திய குறிப்புகளை நமக்கு நினைவூட்டுகிறது. மேலும் அவர், “கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை” என்பவற்றைப் பற்றிய விஷயங்களைக் குறித்தும் பேசினார் (1 கொரிந்தியர் 2:9). தேவனுடைய சிந்தையை அறிவதற்கு நம்மை அனுமதிக்கிற தேவனுடைய ஆவியின் மூலமாகவே இந்த விஷயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன (1 கொரிந்தியர் 2:11, 12). சில வார்த்தைகள் மனிதருடைய பேச்சிற்கு அப்பாற்பட்டவையாக இருந்தன. பவுல் பல தரிசனங்களையும் வெளிப்படுத்துதல்களையும் அனுபவித்திருந்தார், ஆனால் இந்த ஒன்று குறிப்பாக மறக்கமுடியாததாக இருந்தது. பவுலின் கிறிஸ்தவ ஊழியமானது, விளக்கியுரைக்க இயலாத ஆவிக்குரிய பரவசநிலையை உள்ளடக்கியிருந்தது. அவர் தம்மை விமர்சித்தவர்கள் உரிமைகோர முடிந்தது போன்று அவ்வளவு அதிகமாகவே உரிமைகோர முடிந்திருந்தது.*

*இப்படிப்பட்ட திகைக்க வைக்கும் வரலாற்றை அனுபவித்திருந்த யாரேனும் ஒருவர், இதைப்பற்றி மிகச்சரியான விபரங்களுடன் விவரிப்பார் என்று நாம் இயல்பாகவே எதிர்பார்க்கிறோம். மாபெரும் தரிசனம் காண்பவர் ஒருவர் முழுஅனுபவத்தின் ஆராய்ச்சிக்காக ஒரு முழுப்புத்தகத்தையே அர்ப்பணித்திருத்தலைக் காண நாம் வியப்படைய மாட்டோம். அது என்னவாக உணரப்பட்டது? அது எவ்வளவு காலம் இருந்தது? ஆனால் பவுலின் விவரிப்பில், மனதை மயக்கும் இந்த விபரங்கள் காணப்படுவதில்லை. அவர் பின்னோக்கித் திரும்பிப்பார்க்கவோ அல்லது தமது உடல்ரீதியான உணர்வுகளை நினைவுக்குக் கொண்டுவரவோ இல்லை. (‘‘அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்.”) அவர் தேவனால் “எடுக்கப்பட்டார்” என்பதை மாத்திரமே அவர் அறிந்திருக்கிறார். பவுல் தமது ஆவிக்குரிய சாதனைகளைப் பற்றிப் பெருமைபாராட்டுவதற்கு, நாட்குறிப்பேடு எதையும் வைத்திருக்கவில்லை. அவர் தாம் கொடுத்த ஞானஸ்நானங்கள் பற்றிய பதிவேடுகளை வைத்திராதிருந்தது போன்றே (1 கொரிந்தியர் 1:16), தமக்குக் கிடைத்த தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்துதல்கள் பற்றிய பதிவேடுகளையும் அவர் வைத்திருந்ததில்லை.*

*அனேகமாக, பவுல் தமது ஆவிக்குரிய சாதனைகளைப் பற்றிப் பெருமைபாராட்டச் சங்கடப்பட்ட காரணத்தால், அவர் “கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை” என்றும் (12:2) “அந்த மனுஷன்” (12:3) என்றும் பேசத்தேர்ந்து கொண்டிருக்கலாம். 12:7ல் தெளிவாக்கப்பட்டுள்ளபடி, ‘‘அந்த மனுஷன்’’ என்பது பவுலாகவே இருக்கிறார். ஆனால் இந்த மாபெரும் தருணங்கள் பவுலுக்குச் சொந்தமானவை அல்ல என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் ‘‘இந்த உலகத்திற்கு வெளியே’’ இருந்த அனுபவங்களைத் தாம் நினைவுகூரக்கூடுமளவுக்குத் தாம் ஏதொன்றையும் செய்திருந்த காரணத்தால் அது இருக்கவில்லை. 10:17ல் அவர் கூறுகிறபடி, “மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.” பவுலுக்குக் “கர்த்தர் அருளிய தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள்” பற்றிய ஆவிக்குரிய அனுபவத்திற்குள்,*

*பவுலின் மனோதத்துவ சக்திகளோ அல்லது அவரது தனிப்பட்ட திறமைகளோ அவரை வழிநடத்தவில்லை; கிறிஸ்துவுடன் அவருக்கிருந்த உறவே அவரை அதற்குள் வழிநடத்திற்று. இவ்வாறாக, இந்த அனுபவங்கள் எல்லாவற்றிலும் பெருமைபாராட்டுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை! பவுலின் வாழ்வில் இந்தத் தருணங்கள் பற்றிய காரியத்தைக்குறித்து மற்றவர்கள் கொண்டுவந்த காரணத்தால் தான் அவர் இவற்றை விவரிக்கிறார். இந்த அனுபவங்கள் அவரது சீஷத்துவத் திற்கு நிரூபணம் என்ற வகையில் அளிக்கப்படுவதில்லை என்று கூறுவதற்காகவே, அவர், ''மனிதர் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிராத'' அனுபவங்ளை விவரிக்கிறார்!*

*ஆழமான ஆவிக்குரிய மற்றும் உணர்வு எழுச்சிமிக்க அனுபவங்களைப் பவுல் ஒருக்காலும் புறக்கணித்ததில்லை. அவரது அனுபவங்களைப் பிறருக்கு முன்பாக அணிவகுத்தல் என்பது ஏற்புடையது அல்ல என்று எப்போதுமே அவர் கருத்துத் தெரிவித்தார். அப்படிப்பட்ட அனுபவங்களை ஆராய்ந்து பார்ப்பதும் ஒப்பிடுவதும் ஏற்புடையதாயிராது. அவர், "நாங்கள் பைத்தியங் கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியிருக்கும்; ..." என்று கூறினார் (5:13). இப்படிப்பட்ட தருணங்கள் முழு சமுதாயத்திற்குமானதாக இராமல், அவருக்கும் தேவனுக்கும் இடையிலானதாகவே இருந்தன. இதே போன்ற சந்தர்ப்பப்பொருள் ஒன்றில், கிறிஸ்தவர்கள் பாஷைகளைப் பேசும்போது, அவர்கள் தேவனிடத்தில் பேசினர் என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 14:2). அவர் தாமே பாஷைகளில் பேசினார் என்றாலும், அது அவருக்கும் தேவனுக் கும் இடையிலான விஷயமாயிருந்தது (1 கொரிந்தியர் 14:18). முழு சபைக்கும் முன்பாக, அவர் தமது ஆவிக்குரிய அனுபவங்களை அணிவகுப்பதற்குப் பதி லாக கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே விரும்பித் தேர்ந்து கொண்டார் (1 கொரிந்தியர் 14:19).*

*''எடுத்துக்கொள்ளப்பட்டு'' இருத்தல் என்ற அந்த அசாதாரணமான தருணங்கள், பவுலின் வாழ்வில் ஒரு இடத்தைக் கொண்டிருந்தன என்று கூறப் பவுல் மனவிருப்பமாக இருந்தார், ஆனால் தமது அப்போஸ்தலத்துவத்திற்கு "நிரூபணம்" என்ற வகையில் அந்த அசாதாரணமான அனுபவங்களை அளிக்க அவர் மனவிருப்பம் இல்லாதவராக இருந்தார். அவரை விமர்சனம் செய்தி ருந்தவர்கள், ''உண்மையான அப்போஸ்தலருக்குரிய அடையாளங்களை'' தாங்கள் கொண்டிருந்தது பற்றிப் பெருமை பாராட்டினார்கள் என்பதில் சந்தேகமில்லை (12:12). அவர்களின் ''அடையாளங்களுக்கு'' இணையானவற்றைப் பவுல் கொடுக்க மனவிருப்பமாயிருக்கையில், அவர் அவற்றைத் தமது உரிமைகோருதல்களின் நிரூபணம் என்ற வகையில் அளிக்க மாட்டார். அவர், "இப்படிப்பட்டவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்; ஆனாலும் என்னைக்குறித்து என் பலவீனங்களிலேயன்றி, வேறொன்றிலும் மேன்மைபாராட்டமாட்டேன்'' என்று கூறுகிறார் (12:5). உண்மையில், "இந்த உலகத்திற்கு வெளியே" உள்ள அனுபவங்களின்ஆதாரம், வஞ்சனைக்கு வழிநடத்துகிறது (*cf. *12:6). இந்த உரிமைகோருதல்களை அளிக்கிற மக்கள் தங்களையே அல்லது மற்றவர்களை வஞ்சிப்பார்கள் (11:13-15). பல மக்கள் "இந்த உலகத்திற்கு வெளியே" உள்ளது என்னப்படுகிற அனுபவத்தை உரிமை கோர முடியும். ஒவ்வொரு உரிமைகோருதலையும் ஒருவரின் சீஷத்துவத்திற்கு நிரூபணம் என்ற கையில் ஏற்றுக்கொள்ளுதல் சாத்தியமற்றதாக இருக்கும்.*

*“வெளிப்படுத்துதல்களின் விஞ்சி நிற்கும் மாபெரும் தன்மையை” கொண்டிருந்த ஒருவர், கூறுவதற்கு மற்ற பல வரலாறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் யூகிக்க முடியும். சொல்லப்போனால், இப்படிப்பட்ட வரலாறுகளைக் கொண்டு சிலர் நமக்குப் பொழுதுபோகச் செய்வதில் மகிழ்வடைகின்றனர். ஆனால் பவுல், கொரிந்தியர்களின் கண்களுக்கு முன்பாக உள்ள ஆதாரத்தினால் பரீட்சிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைத் தேர்ந்துகொண்ட காரணத்தினால் (*cf. *10:7; 11:6), இப்படிப்பட்ட பெருமை பாராட்டுதல்களில் இருந்து விலகியிருக்கிறார் (12:6). உணர்வு எழுச்சியில் உச்சகட்ட அனுபவமல்ல, ஆனால் பவுல் விட்டுச் சென்றுள்ள பதிவேடுதான் அவரது அப்போஸ்தலத்துவத்திற்கு நிரூபணமாக உள்ளது. அதிகமான விமர் சனத்திற்கு உள்ளாகியிருந்த அவரது பலவீனமானது, வாழ்வுகளை மாற்றுவதி லிருந்து அவரைத் தடைசெய்திருக்கவில்லை. சுவிசேஷம் விசுவாசிக்கப்பட்ட மற்றும் இடங்களில் எல்லாம் சபை தோற்றுவிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் தேவன் கிரியை செய்கிறார். மற்றவர்கள் “காண மற்றும் கேட்கக் கூடியவை” - மற்ற வர்கள் மீதான நமது அக்கறையைச் செயல்விளக்கப்படுத்துகிற ஊழியத்தில் நடவடிக்கைகள், மற்றவர்களுக்காக நம்மையே நாம் மறுதலித்தல் பற்றிய நமது பதிவேடு, சபையின் வாழ்விற்காக நமது உறுதிப்பாடுகள் மற்றவர்களால் காணப்படுகிற வேளைகள் ஆகியவையே நமது சீஷத்துவத்திற்கான நிறைவான பரீட்சையாக உள்ளது. உச்சகட்ட அனுபவத்தை வலியுறுத்துபவர்கள், மற்றவர்களின் தேவைகளைப் புறக்கணித்துவிடும் அளவுக்கு, தங்கள் சொந்த உணர்வுகளில் மிகவும் வசீகரிக்கப்படுகின்றனர்.*

*உச்சகட்ட அனுபவம் பற்றி, பவுல் மற்றும் அவரது எதிராளிகளின் போட்டி உரிமைகோருதல்கள் அனேகமாக நம்மில் பலருக்கு மிகவும் தொலைவில் உள்ளதாக ஒலிக்கலாம், ஏனெனில் இப்படிப்பட்ட திகைப்பூட்டும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள இன்றைய நாட்களில் மிகவும் அரிதாக யாரேனும் ஒருவர் மாத்திரமே உரிமைகோருகிறார். இருந்தபோதிலும் நாம், இதுபோன்ற கேள்விகளை எதிர்கொள்கிறோம். நாம் “மலையுச்சி அனுபவங்கள்” மற்றும் “எடுத்துக்கொள்ளப்படுதல்” பற்றிப் பேசுகிறோம். நமது கிறிஸ்தவ வாழ்வில் உணர்வுகள் கொண்டுள்ள இடம் என்ன என்று நாம் கேட்கிறோம். உணர்வுகளுக்கு வேண்டுகோள் விடுக்கும் எல்லா ஆராதனையையும், திகிலுடன் சிலர் கண்ணோக்குகின்றனர். மற்றவர்கள், மத அனுபவம் யாவற்றையும் உணர்வுகளின் பரீட்சைக்குக் கீழ்ப்படுத்தி, அது “இந்த உலகத்திற்கு வெளியே” இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். இந்தக் கேள்விக்குப் பவுலின் பதிலானது நமக்கு ஏற்புடையதாக உள்ளது. உச்சகட்ட அனுபவத்திற்கு இடம் ஒன்றுள்ளது, ஆனால் அது நமது கிறிஸ்தவத்திற்கு நிறைவான பரீட்சையாக ஒருக்காலும் ஆகிவிடாது. உணர்வுகள் நம்மை வஞ்சிக்கலாம். ஆனால் நீண்டகாலகட்டத்திற்கு அன்பின் ஊழியம் பற்றிய பவுலின் பரீட்சையானது நம்மை வஞ்சிக்காது.*

## *இன்னொரு அனுபவம்: வல்லமையும் பலவீனமும் (12:7-10)*

*பதில் அளிக்கப்பட்ட ஜெபங்களின் ஆதாரத்தை அளித்தல் என்பது, தேவனு*

டைய வல்லமையின் பிரசன்னம் மற்றும் நமது சீஷத்துவத்தின் உண்மைத்தன்மை ஆகியவற்றிற்குப் பொதுவாக அளிக்கப்படும் "நிரூபணங்களில்" ஒன்றாக உள்ளது. நமது மதம் நமக்குச் செய்துள்ள உறுதியான விஷயங்களை நாம் எப்போதுமே சுட்டிக்காண்பிக்க முடியும் என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஜெபத் திற்குப் பதில் கிடைத்தல் என்ற விஷயம் அடிக்கடி நமக்குக் கூறப்படுகிறது. நிதி நிலை வெற்றிக்கான கதவுகளைத் தேவன் திறக்கிறார் மற்றும் நமக்கு உடல் நலத்தையும் மன சமாதானத்தையும் உறுதிப்படுத்துகிறார். சொல்லப்போனால், சில நிகழ்ச்சிகளில், மக்கள் தங்கள் விசுவாசத்தின் உண்மை நிலையை நிரூபிக்க விளைவுகளை ஒப்பிட்டுள்ளனர்

தேவன் ஜெபத்தைக் கவனித்துக் கேட்கிறார் மற்றும் அதற்கு அவர் பதில் அளிக்கிறார் என்பதைக் கிறிஸ்தவர் எவரும் மறுக்கமாட்டார். ஆனால், ஜெபத்தைத் தவறாகப் புரிந்துகொள்ள முடிவதற்கும் அதை நமது விருப்பத்தைத் திருப்திப்படுத்தும் ஒரு மாயச் சூத்திரத்தின் வகையாக நடத்துவதற்கும் சாத்தி யம் உள்ளது. பவுலின் விமர்சகர்கள் தங்கள் உச்சகட்ட அனுபவங்கள் பற்றிப் பெருமைபாராட்டுவதிலான தங்களின் மன ஈர்ப்பில், அனேகமாக ஜெபத்தின் வியத்தகு செயல்விளைவுகளைப் பற்றியும் பெருமைபாராட்டி இருக்கலாம். அவர்கள் எதை உரிமைகோரினர் என்பதை நாம் அறிவதில்லை, ஆனால் பவுலின் சொந்த ஜெபவாழ்வு பற்றிய அவரது விவரிப்பானது, அவர்களின் பெருமைபாராட்டுதலுக்கு இணையானதைக் கூறப் பவுல் மீண்டும் தயாரானார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. ஒருவேளை அவர்கள், ஜெபம் என்பதைத் தேவனுடைய வல்லமையைத் தாங்கள் ஒரு விசேஷித்த வகையில் அனுபவித்த வேளை என்ற வகையில் விவரித்திருக்கலாம்.

ஜெபத்தைப் பற்றிய பவுலின் வரலாற்றை அவர், வேறொரு வகையில் நமக்கு அறியப்படாததாக உள்ள, அவரது வாழ்வின் இன்னொரு நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டுவருதல் மூலம் தொடங்குகிறார். அவரது கிறிஸ்தவ வாழ்வு உச்சகட்ட அனுபவங்களை மாத்திரம் கொண்டிருந்ததாக இருக்க வில்லை என்று அவர் நமக்குக் கூறுகிறார். அவர் தம்மை மிகவும் உயர்த்திக் கொள்வதிலிருந்து அவரைத் தடுத்துக் காப்பதற்காக, அவருக்குத் தேவன் "நான் என்னை உயர்த்தாதபடிக்கு" "மாம்சத்திலே ஒரு முள்ளை" அனுப்பினார் (12:7). அவரைத் தேவன், பூமியின்மீதுள்ள வேதனையின் உண்மை நிலைக்குக் கொண்டுவருவதற்காக, பரதீசின் பரவச நிலையின் உயரங்களில் இருந்து எடுத்திருந்தார். "எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த" அதே நபர், வேதனையினால் தாழ்மைப்படுத்தப்பட்டிருந்தார். வேதனையானது பரவச கணத்தை எதிர்ச்சம நிலைப்படுத்தியது. கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட தீர்வுகள் பலவாக இருந்தாலும், பவுலின் "மாம்சத்தில் இருந்த முள்" என்ன என்று நாம் அறிவதில்லை. பேசுதலில் ஒரு இடையூறு (cf. 10:10) அல்லது கண்ணில் இருந்த ஒரு சுகவீனம் (cf. கலாத்தியர் 4:15) ஆகியவற்றைச் சாத்தியக்கூறுகள் உள்ளடக்கியிருக்கின்றன. தொடக்ககால சபையில் சிலர், பவுலுக்கு வலிப்பு நோய் என்ற வியாதி இருந்ததாக நினைத்தனர். இப்படிப்பட்ட யூகங்கள் அனேகமாக பயன் இல்லாதவையாகவே இருக்கின்றன. நாம் யாவரும், "மாம்சத்தில் இருந்த முள்" என்பது பவுலுக்கு உடல்ரீதியான மற்றும் உணர்வுரீதியான வேதனையைக் கொடுத்தது என்று அறிகிறோம். RSV வேதாகமத்தில் "தொல்லைகொடுத்தது" என்று தரவழைக்கப்பட்டுள்ள வார்த்தையானது "முட்டியைக் கொண்டு தாக்குதல்" என்று அர்த்தப்படுகிறது.

*இந்த வார்த்தை பொதுவாக அடித்தல் என்பதற்கு பயன்படுத்தப்பட்டது (cf. 1 பேதுரு 2:20). இது பவுலின் உடல்ரீதியான ஆரோக்கியத்தின் மீதான உபத்திரவத்தின் செய்விளைவுகளைக் குறிக்கக்கூடும். இந்த சந்தர்ப்பப்பொருளில், "மாம்சத்தில் முள்'' என்பது, பவுலை மதிப்புக் குலைந்தவராக்கப் போதுமானது என்று பலர் நினைத்த, அவரது உடல்ரீதியான பலவீனம் என்ற வரையறையின் உதாரணமாக உள்ளது. மாபெரும் அனுபவங்களை "தலைக்குள் செல்ல'' அனுமதித்து அவர் பெருமைபாராட்டக் காரணமாகுதல் சுலபமாக இருந்திருக்கும் - இது "பிரதான அப்போஸ்தலர்களின்'' தவறாக இருந்தது (10:12முதல்). அதற்குப் பதிலாக, சரீர வியாதியானது அவரது பலவீனத்தை அவருக்கு நினைவூட்டி தேவனுடைய கிருபையைச் சார்ந்திருக்கச் செய்தது.*

*பவுலின் ஆவிக்குரிய வல்லமையில் சில, ஜெபத்தின் மூலமாகக் கிடைத்த வேதனையின் மீதான மாபெரும் வெற்றியை நமக்குக் கூறும் என்று நாம் எதிர்பார்க்கலாம். உண்மையில் இந்த சந்தர்ப்பப்பொருளில் நாம், பவுல் மாபெரும் ஆவிக்குரிய வெற்றியின் இன்னொரு உதாரணத்தை உரைப்பார் என்று எதிர்பார்க்கிறோம். மற்றவர்கள் மாபெரும் தடைகளை வெற்றிகொள்ள ஜெபம் தங்களை வலிவுள்ளவர்களாக்கியது என்ற தருணங்களுக்கான தங்களின் சொந்த உரைகளை அளித்திருக்கலாம். ஆனால் 12:7, 8 வசனப்பகுதியில் பவுல் இப்படிப்பட்ட வரலாறு எதையும் கூறவில்லை என்பது நம்மைத் திகைக்க வைக்கிறது. ஜெபத்தின் மூலமாகச்சுலபமான தீர்வுகள் மற்றும் மனதை ஈர்க்கும் வல்லமை ஆகியவைபற்றி அவர் கூறவேண்டும் என்று அவரது வாசகர்கள் எதிர்பார்த்திருந்தால், அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். "அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன்'' (12:8). அவரது முதலாவது அல்லது இரண்டாவது ஜெபத்திற்குக் கூடப் பதில் வராதிருந்தது. "மூன்றுதரம்'' என்பது, விரைவான மற்றும் மாயவகையிலான பதில்கள் இல்லாத போது, ஜெபத்தின் விசேஷித்த வலிவைக் கருத்தாகத் தெரிவிக்கிறது (cf. மாற்கு 14:32-39).*

*''மாம்சத்தில் இருந்த முள்'' பற்றிய பவுலின் வேண்டுதலானது, அவரது வேண்டுகோளுக்குப் பொருத்தமான வகையில் ஒருக்காலும் பதில் அளிக்கப்படவில்லை. "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்'' என்பதே அவர் பெற்றுக் கொண்ட பதிலாக இருந்தது (12:9). வலுவற்ற உடல்நலத்தில் அவர் தமது ஊழியப் பணிகளைத் தொடரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். அவர் தமது உடல் நலம் மாத்திரம், இன்னும் நன்றாக இருந்தால், தமது செயல்விளைவுத் தன்மையானது மிகவும் அதிகரித்திருக்கக் கூடும் என்று பலமுறை நினைத்திருக்கலாம். அவர் மாபெரும் வல்லமையைச் செயல்விளக்கப்படுத்த மாத்திரம் முடிந்திருந்தால், தமது சொந்தத் தோற்றத்தையும் தமது உடல் வலிமையும் கொண்டு இன்னும் அதிகமான மக்களை மனம் ஈர்த்திருக்கக் கூடும்! இருந்தபோதிலும் பவுல், தேவனுடைய வல்லமைக்கு "நிரூபணம்'' அளித்த ஜெபங்களைச் சுட்டிக்காட்ட முடியாதவராயிருந்தார்.*

*"உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்'' என்று பவுல் கூறுகிற இடமான கலாத்தியர் 4:13ல், பவுலின் வலிவற்ற உடல் நலம் பற்றிய இன்னொரு குறிப்பு உள்ளது. அந்த முதல் சுவிசேஷ ஊழியப் பிரசங்கத்தின் சூழ்நிலைகள் பற்றி நாம்*

அறிவதில்லை, ஆனால் பவுல் உடல்நலமற்றவராக இருந்திருக்கவில்லை என்றால், அவர் பிரசங்கித்ததைக் கலாத்தியர்கள் ஒருக்காலும் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற உண்மையினால் நாம் மனம் ஈர்க்கப்படுகிறோம். அவரது சுகவீனத்தின் காரணமாகவே அவரைத் தேவன் விலைமதிப்பு உள்ள வகையில் பயன்படுத்தக் கூடியவராக இருந்தார்! அந்த உடல்சுகவீனம் பவுலை ஒருக்காலும் நிறுத்திவைக்க முடியவில்லை. அது அவரது கால அட்டவணையை மாத்திரம் மாற்றி அவரது திட்டங்களை மாற்றச் செய்தது.

"மாம்சத்தில் இருந்த முள்ளை" சகித்துக்கொண்டிருந்த இந்த அனுபவத்தின் போதுதான் பவுல் மதிப்புமிக்க பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டார். நமது கிறிஸ்தவத்திற்கான "நிரூபணம்" என்பது நமது உச்சகட்ட அனுபவங்களிலோ அல்லது ஜெபம் "கிரியை செய்த" நிகழ்வுகளிலோ இருப்பதில்லை. இந்த அனுபவங்கள் நமது சாதனைகளைப் பற்றிப் பெருமைபாராட்டும்படி நம்மை வழிநடத்துகின்றன. நம்பகத்தன்மை வாய்ந்த கிறிஸ்தவர், தம்மீதல்ல ஆனால் தேவனுடைய கிருபையின் மீதே தாம் சார்ந்திருப்பதை அறிகிறார். "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்." பவுலிடம் பலவீனம் இருந்துபோதிலும் அல்ல ஆனால் அவரது பலவீனத்தின் காரணமாகவே அவரைத் தேவன் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது.

மத்திய தரைக்கடலைச் சுற்றிலும் இருந்த உலகப்பகுதிகளில் சபைகள் இருந்தன என்பதைக் காட்டிலும், தேவனுடைய வல்லமையின் மாபெரும் அடையாளம் வேறெதுவும் இருக்கவில்லை. இந்த சபைகள், காணப்படக்கூடிய பேச்சுத்திறன் மற்றும் உடல்திறன் ஆகியவற்றைப் பாராட்டியிருந்த உலகத்தில், மனதை ஈர்க்காத ஒரு உருவத்தால் தோற்றுவிக்கப்பட்டன, மற்றும் இவைகள் தேவனுடைய வல்லமையானது மனித பலவீனங்களுக்கும் மத்தியில் பிரசன்னமாகியிருந்தது என்பதற்குச் சான்றாக இருந்தன. இந்த சபைகளைத் தோற்றுவித்தவர் வல்லமையின் பொதுவான "நிரூபணங்களை" கொண்டிருந்தார் என்றால், உலகத்தில் தேவனுடைய வல்லமை கிரியை செய்ததைக் காணப் பலர் தவறியிருப்பார்கள். அவர்கள், இந்த உலகத்தில் மனித வல்லமையே கிரியை செய்தது என்று முடிவு செய்திருப்பார்கள்.

பவுல் தமது சொந்த அனுபவத்தின் மிகவும் மாறுபட்ட இரு விபரங்களை இந்தச் சந்தர்ப்பப்பொருளில் ஒன்றாக வைத்தார் என்பது மனதைக் கவரக்கூடியதாக உள்ளது. ஒரு நிகழ்ச்சியானது திகைக்கச் செய்யும் ஆவிக்குரிய வல்லமையின் வேளையை விவரித்தது. இன்னொன்று, ஆவிக்குரிய நடத்துனர் ஒருவரின் "சங்கடமான தோல்வியை" விவரித்தது. பிந்தியதுதான் பவுலின் உண்மைத்தன்மைக்கு "நிரூபணமாக" உள்ளது, ஏனெனில் அவர் தமது பலவீனங்களைத் தவிர வேறு எதிலும் பெருமைபாராட்டமாட்டார். அவர், தமது பலவீனங்களைக் குறித்து மாத்திரம் பெருமைபாராட்ட விரும்பினார் என்பதால், 12:5ல் அவர் "ஒரு மனிதனை" குறித்துப் பெருமைபாராட்ட அக்கறை எடுத்துக்கொள்ளாது இருந்தார். 12:9ல் அவர் இதே சிந்தனையைத் திரும்பவும் உரைக்கிறார்: "ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்."

## *பலவீனமும் வல்லமையும்*
## *(12:10-12)*

*பலவீனம் மற்றும் பலம் பற்றிய பவுலின் அணுகுமுறை நமது இயல்பான மனவிருப்பங்களுக்கு நேரெதிராக ஓடுகிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். நாம், "நான் பலமாயிருக்கும் போது, தான் நான் பலமாயிருக்கிறேன்" என்று கூறுவதை விரும்பித் தேர்ந்து கொள்ளுவோம், ஏனெனில் இது நமது கலாச்சாரத்தின் தர அளவையாக உள்ளது. சுய உறுதிப்பாட்டுத் தன்மை மீதான புத்தகங்கள், வல்லமையுடனான நமது மன ஈர்ப்புக்கு வேண்டுகோள் விடுக்கிற காரணத்தினால், அவைகள் எப்போதுமே பிரபலமானவைகளாக உள்ளன. நமது இயல்பான சாய்தல்கள் நமது கிறிஸ்தவ வாழ்வைப் பாதித்தால், நாம் நமது ஊழியத்தை இந்தக் கண்ணோக்கத்தில் காண்போம். ஒரு வெற்றிகரமான ஊழியர் அல்லது வெற்றிகரமான சபை என்பதைப் பற்றி நாம் நினைக்கும்போது, வல் லமை மற்றும் செல்வாக்கு ஆகியவற்றின் அடையாளங்களை நாம் கண்ணோக்கத் தேடலாம். ஊழியர்களும் சபை நடத்துனர்களும், தங்கள் ஆதாரமூலங்கள் நிறைந்த தன்மையைச் சுட்டிக் காண்பிக்கும் விளைவுகளை ஒப்பிட்டுப் பார்க்க நிர்ப்பந்திக்கப்படும் ஒரு செயல்முறையை நாம் ஊக்குவிக்கலாம். வல்லமையின் பின்வரும் அடையாளங்களை நாம் கொண்டிருந்தாலன்றி, உண்மையான ஊழியம் எதுவும் சாத்தியமானதாக இருப்பதில்லை என்று நம்பும்படி நாம் சோதிக்கப்பட முடியும்: கெம்பீரமான கட்டிடம், நவீனக் கருவிகள், மிகவும் படைப்பாற்றல் உள்ள பணியாளர்கள் மற்றும் மாபெரும் உறுப்பினர்கள். நல்ல வசதிகளையும் திறமையான மக்களையும் கொண்டிருத்தல் என்பது நிச்சய மாக ஏற்புடையதாகவே உள்ளது. ஆனால், தேவனுடைய வல்லமை தனது செயல்விளைவைக் கொண்டிருக்கக் கூடுவதற்கு முன்னர் நமது சொந்தபலம் அவசியமாக உள்ளது என்று நாம் முடிவு செய்தால், நம்மை நாமே வஞ்சித்துக் கொள்கிறோம்.*

*நடைமுறை வழக்கத்தின் தர அளவைகளின் கீழ், இயேசுவும் அவரது சீஷர்களும் முற்றிலும் வல்லமையற்றவர்களாகவே இருந்தனர். சிலுவையானது மனித பலவீனத்தை அடையாளப்படுத்திற்று. ஆனால் சிலுவையில் அவரது பலவீனமானது, உயிர்த்தெழுதலின் வல்லமைக்கான சந்தர்ப்பமாக இருந்தது. பவுல், "அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனு டைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்" என்று கூறுகிறார் (13:4). அவரது பலவீனத்தில் இருந்தே தேவனுடைய வல்லமை வந்தது. நம்பகத்தன்மை வாய்ந்த சீஷத்துவத்தில், பலவீனமே பலமாக உள்ளது என்பதை நாம் புறக்கணிக்க இயலாது. பவுலின் பலவீனத்தில் தேவனுடைய வல்லமை பூரணமாயிற்று என்பதைப் பவுல், தமது "சரீரத்தில் இருந்த முள்ளில்" இருந்து கற்றுக்கொண்டார் (12:9). இந்தக் காரணத்தினால் அவர், "பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும்" மன நிறைவடைந்தார். அவர், "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன் ..." என்று முடிவு செய்கிறார் (12:10).*

*வெற்றிகரமான ஊழியத்தின் அடையாளம் என்னவாக உள்ளது? சிலுவையின் அற்புதமும் உயிர்த்தெழுதலும் திரும்பச் செய்யப்படும் இடத்தில் வெற்றிகரமான ஊழியம் காணப்படமுடியும். நமது பலவீனங்கள், தேவனு*

டைய வல்லமை கிரியை செய்ய வாய்ப்பு அளிக்கும்போது, நாம் வெற்றிகரமான சபையாகிறோம். 12:10-13ல் பவுல், தாம் விமர்சிக்கப்பட்டிருந்த அதே பலவீனங்களைக் குறித்துத் திரும்பத் திரும்பப் பெருமைபாராட்டுகிறார் என்பது மனதை ஈர்க்கக் கூடியதாக உள்ளது (11:30; 12:5, 9; cf. 13:4). அவரை விமர்சனம் செய்தவர்கள், "உண்மையான அப்போஸ்தலருக்குரிய" தவறான "அடையாளங்களை"க் கண்ணோக்கியிருந்தனர் (12:12).

## முடிவுரை

ஒருவேளை நாம், பவுலை விமர்சித்தவர்களின் இடத்தில் அடிக்கடி நின்று, உண்மைக் கிறிஸ்தவத்திற்குத் தவறான அடையாளங்களைக் கண்ணோக்கத் தேடிக்கொண்டிருக்கிறோம் உச்சகட்ட அனுபவங்கள் என்பவை மிகவும் மனதை ஈர்ப்பவையாகவும் மனஎழுச்சியூட்டுபவையாகவும் உள்ளன. வெளியில் இருப்பவருக்கு சந்தேகத்திற்கு இடமின்றி அவைகள் மிகவும் வசீகரிக்கக்கூடியவைகளாக உள்ளன. அவைகள் பவுலுக்குப் போன்றே, மறக்க முடியாத நினைவுகளை அளிக்கின்றன. ஆனால் உண்மையான சபையானது "இந்த உலகத்தில் இருந்து வெளியே" இருப்பதில்லை. வேதனையும் சலிப்பும் உள்ள இடத்தில் வாழ்வதற்கான அதன் மனவிருப்பமும், உடல்ரீதியான சுகவீனங்களையும் சலிப்புகளையும் சமாளித்தலுமே, அதன் பற்றுறுதிக்கான இறுதிப் பரீட்சையாக உள்ளது. இவைகள் "உலகத்தில்" இருப்பதாகவே இருக்கின்றன.